## ☆ 4-ம் கட்ட பேச்சு சில தினங்களில் ஆரம்பம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான நான்காம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

கொழும்பு உல்லாசப் பயணத் துறைக்கட்டிடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த, செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்

(2ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 9 இதழ் 11
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21-2-1995

## ஜூலைக்கு முன் பேச்சு பூர்த்தி?

(கொழும்பு)

இனப்பிரச்னை தொடர்பாக அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்னர் பூர்த்தியடையுமெனஎதிர்பார்க்கப்படுவதாக அரசியல் விவகார அமைச்சரும், பிரதிநிதியமைச்சருமான பேராசிரியர் ஜீ எல். பீரிஸ் கூறியுள்ளார்.

நான்காம் கட்ட பேச்சுவார்த்தை குறித்து இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படும்

(2-ம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் பேச்சுக்களில் மந்தநிலை இருப்பது உண்மை!

## தமிழ்ச்செல்வன் கூறுகிறர்

[லண்டன்]

''அரசுக்கும் – விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தற்போது ஒரு மந்தமானநிலை ஏற்பட்டுள்ளது உண்மைதான்'' விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் நேற்று பி. பி. ஸி.க்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் இதுவரை மூன்று கட்டப் பேச்சுக்கள் நடைபெற்றுவிட்டன. பேச்சுவார்த்தைகள் தொடங்கி நான்கு மாதங்களாகிவிட்டன. இந்த மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் இருதரப்பினுலும் பேசி இணக்கம் காணப்பட்ட விடயங்களில் அநேகமானவை, இன்னும் அரசாங்கத்தினல் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன.

இரு தரப்பினருக்குமிடை

(2ம் பக்கம் பார்க்க]

## பாதைப் பிரச்னை தீரும் அறிகுறி தென்படுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இழுபறி நிலையில் இருந்து வரும் தரைவழிப் போக்குவரத்துப் பாதைப் பிரச்னை தீர்ந்துவிடும் சாத்தியம் நிலவுவதாகக் கொழும்பு அரசியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ள

(2-ம் பக்கம் பார்க்க)

## மின்சார வயர்களுடன் கப்பல் வருகிறது

(கொழும்பு)

சிமெந்து, இரும்பு, தார், மின்சார வயர்கள் போன்ற பொருட்களுடன் கப்பல் ஒன்று பருத்தித்துறைக்கு பயணமானதாக அமைச்சர் தர்மசிறிசேனநாயக்கா

(2ம் பக்கம் பார்க்க

## ஆர்ப்பாட்டப் பேரணிகள் பரவலாக நடந்தன

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கம் கடைப்பிடித்து வரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து, பரவலாக ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தப்பட்டன.

முல்லை மாவட்டம் ஒட்டு

(2ம் பக்கம் பார்க்க)

## சமாதானமுயற்சிகள் நிச்சயம் வெற்றியளிக்கும்! - வாசுதேவ வவுனியாவில் உரை

(வவுனியா)

''விடுதலைப் புலிகள் சமாதானத்தை உண்மையாகவே விரும்புகின்றனர். ஆகவே சமாதான முயற்சிகள் நிச்சயம் வெற்றியளிக்கும்.''

இவ்வாறு, யாழ்ப்பாணம் வந்து திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் கூறினர்.

இவ்வைபவத்தில் திரு.வாசுதேவ நாணயக்கார தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''சமாதான முயற்சிகள் பற்றி தற்போது ஒரு தெளிவான நிலைமை ஏற்பட்டுவிட்டது. விடுதலைப் புலிகள் சமாதானத்தை உண்மையாகவே விரும்புகின்றனர். இந்தச் சமாதான முயற்சிகளை எங்கே தொடங்குவது, எப்படித் தொடங்குவது, எவ்வாறு தொடங்குவது போன்ற கேள்விகளுக்கு எமது யாழ்ப்பாண நல்லெண்ண விஜயத்தின்

(4-ம் பக்கம் பார்க்க)

## பொது எழுதுவினைஞர் சேவை போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுவினைஞர் சேவை போட்டிப் பரீட்சை (1995) எதிர்வரும் 26ம் திகதி காலை 09.00 மணியிலிருந்து மாலை 05-30 மணி வரை யா / கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என தமிழீழ நிர்வாக சேவை அறிவித்துள்ளது.

மேற்படி பரீட்சையின் நேர அட்டவணை வருமாறு:

| பாடம் | நேரம் |
|---|---|
| தமிழ்மொழி | 09.00—11-00 |
| பொது விஞத்தாள் | 11-15—01-15 |
| ஆங்கிலமொழி | 01-45—03-45 |
| நுண்ணறிவு | 04-00—05-30 |

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை புலிகள் மீறமாட்டார்கள் - அன்ரன் பாலசிங்கம்

(கொழும்பு)

''அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில தற்போது நடைமுறையில் இருந்துவரும் மோதல்தவிர்ப்பு ஒப்பந்தத்தை, விடுதலைப் புலிகள் ஒருபோதும் மீறமாட்டார்கள்''

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்ததாக ரூபவாஹினி நேற்றுக்

(2ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாணவர்களின் வெட்டுப்புள்ளிப் பிரச்னை உடன் கவனிக்கப்படும்

— கல்வி அமைச்சர் உறுதி —

(கொழும்பு)

யாழ். மாவட்டக.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர் வெட்டுப்புள்ளி பிரச்னை தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன உறுதியளித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாகொலைகுற்றச்சாட்டு: புலிகள் முற்றாக மறுப்பு

(கொழும்பு)

ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்காவை புலிகள் படுகொலை செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துள்ளதாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தம்மை சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்

(2ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1397)


# மோசடி வர்த்தகர்களை பிடிக்க திடீர் சோதனைக் குழுக்கள்

(கொழும்பு)

மோசடி வர்த்தகர்களைப் பிடிக்க நூறுபேரைக்கொண்ட திடீர் சோதனைக் குழுவொன்றை அரசு நியமித்துள்ளது.

பொருட்களின் விலைகளை கூட்டி விற்று மக்களின் வயிற்றிலடிக்கும் மோசடி வர்த்தகர்களைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு இந்த திடீர் சோதனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு தனது நடவடிக்கையில் உடனடியாக இறங்கவுள்ளது. மோசடி வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும். அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் இவ்வாறான வர்த்தகர்கள் பற்றிய தகவல்களை இக்குழுவுக்கு தெரிவிக்குமாறு அரசு பொதுமக்களை கேட்டுள்ளது.

இக்குழுவுக்கு உதவியாக பொலிஸாரும் செயற்படுவர் எனவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. - சி

## ஓய்வூதியத்தில் ஏற்பட்ட தவறுகள் விரைவில் திருத்தியமைக்கப்படும்

(மானிப்பாய்)

கொழும்பில் கணனி மூலம் ஓய்வூதிய வவுச்சர்களை தயாரிக்கும் போது வேலைப்பழுவின் காரணமாக சில ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தில் தவறுகள் ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும் இவை தற்போது திருத்தப்பட்டு வருகிறது.

கடந்த 1994 மேயிலிருந்து சகல ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதிய நிலுவை செலுத்த வேண்டி இருந்ததால் வேலைப்பளு காரணமாக கணனியை இயக்கியபோது மேற்படி தவறுகள் விடப்பட்டுள்ளன. ஏற்கனவே 95 பெப்ரவரி, 95 மார்ச் மாதங்களுக்குரிய ஓய்வூதியவவுச்சர்கள் கணனி மூலம் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் ஜனவரி 95இல் ஏற்பட்ட இத்தவறுகள் ஓய்வூதிய உறுதிச் சீட்டில் 95 ஏபரல் மாத ஓய்வூதிய வவுச்சர்களில் திருத்தப்படும்.

95 ஜனவரியில் தவறுதலாக குறைத்துக் கொடுக்கப்பட்ட ஓய்வூதியத்தின் 95 ஜனவரி தொடக்கம் 95 மார்ச் வரையிலான பாக்கிப்பணம் யாழ் செயலக ஓய்வூதியக்கிளையிலகையால் தயாரிக்கப்பட்டு காசோலை மூலம் அந்தந்த வங்கிகளுக்கு கூடிய விரைவில் அனுப்பி வைக்கப்படும். இதற்கிடையில் பெப்ரவரி 95க்குரிய ஓய்வூதியம் அடுத்த கிழமை அனுப்பி வைக்கப்படவுள்ளது.

மேலும் தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள கஷ்டங்களுக்கு யாழ். செயலகம் வருத்தம் தெரிவிப்பதாக பிரதம கணக்காளர் திரு. சு. சிவபாலன் அறிவித்துள்ளார். 71-ஐ

### கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நாளை 22ம் திகதி புதன்கிழமை கொழும்பு செல்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச்செல்பவர்களையும். இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் அன்று காலை 7-00 மணியளவில் யாழ். பொதுவைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

### சந்திரிகா கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்: ஜனாதிபதி சந்திரிக்கா இதய சுத்தமானவர். தமிழர் பிரச்னையை நன்கு புரிந்து கொண்டவர். இனப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்பதில் உண்மையாகவே அக்கறையுள்ளவர். இப்படிப்பட்ட நிலையில் சந்திரிக்காவை கொல்ல வேண்டிய அவசியம் புலிகளுக்கு இல்லை.

சிங்கள இன அரசியல் தலைவர்களை படுகொலை செய்வது தமது இயக்கத்தின் நோக்கமல்ல என்றும் அவர் தெரிவித்தார். க-இ

### பாம்பினால் கடியுண்டார்

(நெல்லியடி)

வயலில் அருவி வெட்டச் சென்ற இளம் யுவதி ஒருவர் பாம்பினால் கடியுண்டு ஆபாத்தான நிலையில் மந்திகை மருத்துவமனையிலிருந்து யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் இச்சம்பவம் வறணி இடைக்குறிச்சி என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது. செல்வி-கதிர்காமர்-சுதாஜினி (வயது 23 என்னும் யுவதியே பாம்பினால்கடியுண்டவராவார். 160சி

### நோயாளியின் சகோதரரிடம் இப்படியும் மோசடி

(நெல்லியடி)

சக்கிரசிகிச்சைக்கு இலக்காகியிருக்கும் வர்த்தகர் ஒருவரின் போலிக் கையொப்பமிட்ட கடிதத்தை காட்டி அவரது சகோதரனின் கடையில் 500 ரூபா பணத்தை ஏமாற்றி வாங்கிய இளைஞன் ஒருவன் மீண்டும் அங்கு பணம் வாங்கச் சென்ற சமயம் வகையாக மாட்டிக்கொண்டார்.

இச்சம்பவம் பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள ஒரு பலசரக்குக் கடையில் நிகழ்ந்துள்ளது.

சுமார் 18 வயது மதிக்கத்தக்க இவ் இளைஞன பிடிக்கப்பட்டுகடையில் வைத்துநைய.ப்புடைக்கப்பட்டபின விடுவிக்கப்பட்டார். 160-சி

### பென்சன் வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட ரயில்வே திணைக்கள ஊழியர்களினதும் உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்களினதும் பெப்ரவரி மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவிலிருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது வங்கிகளுக்கு சென்று இவற்றைப் பெற்றுக்கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது. -71-இ

### விளையாட்டு உபகரணங்களைப் பெறவும்

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேச செயலகம் மூலம் இப்பகுதி எல்லைக்குட்பட்ட திறம்படச் செயல்பட்டு வரும் சனசமுக நிலையங்களுக்கும், விளையாட்டுக்கழகங்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன

இதனைத் தலைவர் செயலாளரின் அத்தாட்சிக் கடிதத்தைச் சமர்ப்பித்து நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேசச் செயலாளர் கலாநிதி க. குணராசா தெரிவித்துள்ளார். 154

## அரசு—புலிகள் பேச்சுக்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டபோது, அரசாங்கமே தனது நிலைப்பாட்டை முதலில் வெளியிட்டது.

அதாவது, வடபகுதியில் வாழும் மக்கள் இன்று அன்றுடம் அனுபவிக்கும் அவலங்கள், துன்பங்களைக் களைந்து, நாட்டில் ஏனைய பகுதிகளில் உள்ளமக்கள் வாழ்கின்ற வாழ்க்கை நிலைபோல் இங்கும் ஏற்படுத்துவதே தமது திட்டம் என்று கூறினார்கள்.

இன்று எமது மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் அவலங்கள் பிரச்னைகள், தடைகள் அனைத்தும் இராணுவத்துடன் சம்பந்தப்பட்டவை.

அரசதூதுக்குழுவினர் எம்முடன் பேசி இணக்கம் கண்டவற்றை அரசால் நடைமுறைப்படுத்த முடியாது இருக்கின்றது. இதுவே இன்றைய பேச்சின் மந்தநிலைக்கு முக்கியகாரணமாகும்.

கே நீங்கள் புதிய, புதிய நிபந்தனைகளை விதிப்பதாகவும் உங்கள் தரப்பில் இருந்து பகைமை நிறுத்தல்மீறல சம்பவங்கள் நிகழ்வதாக அரசும் இராணுவமும் குற்றம் சாட்டுகின்றனவே?

ப: நாம், புதிய புதிய நிபந்தனைகளை விதிக்கவில்லை எமது மக்களின், மிகவும் அவசியமான அன்றுடப் பிரச்னைகளைத் தீர்க்கும்படியே கேட்கின்றோம். பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்களையே நிறைவேற்றும்படி நாம் வலியுறுத்துகின்றோம்.

புதிய நிபந்தனைகளை விதிக்கினறோம் என்று, அரசு கூறுவது உண்மைக்குப்புறம்பானதொன்று, தாக்குதல் நிறுத்தல் நடவடிக்கைகளை நாம் மீறுவதாக அரசும் இராணுவமும் கூறுவது தவறானதுஇராணுவமே பலதடவைகள் இதனை மீறியுள்ளது.

கேள்வி: பெரும்பாலான பொருட்கள்மீதான தடைகள் நீக்கப்பட்டுவிட்டதாக அரசு றிவித்துள்ளது, இது உங்கள் நிபந்தனைகளில்ஒன்று. பொருளாதாரத் தடை எந்தளவில் நீக்கப்பட்டுள்ளது?

பதில்: பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ளதாக, அரசு பல தடவைகள் அறிவித்துள்ளது. ஆனல் தடை நீக்கப்பட்ட பொருட்கள் கூடுதலாக இங்குவந்துசேரவில்லை. இவற்றில் இரு விடயங்களில் அரசு முடிவெடுக்கவில்லை.

ஒன்று அரசு தடை நீக்கிய பொருட்களை, வவுனியாவில் உள்ளஇராணுவத்தினர் தடைமுகாம்களில் வைத்து மட்டுப்படுத்துவது. இரண்டாவது மிகவும அவசியமான எரிபொருட்களுக்கு அரசு தடைவிதித்துள்ளது. எரிபொருள் தடையை நீக்காமல் வேறு பொருட்களின் தடையை நீக்குவது, ஒரு அர்த்தமற்ற செயலாகும். எரிபொருள், மின்சாரம், இல்லாமல் எந்த அபிவிருத்திப்பணிகளும் இங்கு மேற்கொள்ள முடியாது. இவை அனைத்தையும் அரசு மறைத்து சர்வதேச உலகிற்கு போலியான பிரசார உத்திகளை மேற்கொண்டு வருவதாகவே நாம் கருதுகின்றோம்.

கே: சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் ஏற்கனவே இலங்கைக்கு வந்துவிட்டனர். அவர்கள் இன்னும் ஏன் செயல்படத்தொடங்கவில்லை?

ப: கண்காணிப்புக்குழு செயல்படாமல் இருப்பதற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பாகும். இராணுவத்தின் நகர்வு பற்றியும், எமது போராளிகள் பற்றியும் கடல் வலயச் தடைச் சட்டம் பற்றியும் பேச்சுகளின்போதுமிகவும் விரிவாகப் பேசி இணக்கம் கண்டுள்ளோம் அரசுகுழுக்கள் கொழும்பு சென்றன. அதற்கு மாறான அறிவித்தல்களை அரசு வெளியிட்டது. இங்கு வந்த வெளிநாட்டு கண்காணிப்பு குழுவினரிடமும் இதுபற்றி விரிவாக விளக்கினேம்.

கிழக்கு பாகாண விடயத்தில் அரசும்-புலிகளும் மீண்டும் பேசி விரிவான இணைப்பு ஒப்பந்தம் ஒன்றை சேர்த்துக்கொண்ட பின்பு தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம் என்று கூறினார்கள். ஆனல் அரசாங்கம் இவற்றை மறைத்து கண்காணிப்புக் குழுக்கள் செயற்படாமைக்கு புலிகளே காரணம் என்று பிரச்சாரம் செய்கின்றது.

கேள்வி: புலிகளும் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்ற கருத்தை ஏற்படுத்துவதற்காக இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளீர்களா? அல்லது ஆத்மபூர்வமாகவே இப்பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளீர்களா?

பதில்: நாங்கள் ஆத்மபூர்வமாகவே இப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். புதிய அரசு பதவியேற்ற பின்பு எமது தேசியத்தலைவர் சமாதான முயற்சிகளுக்கு தமது நல்லெண்ண நடவடிக்கைகளை பல தடவைகள் காண்பித்துள்ளார். ஒரு சமாதானப் பேச்சுக்களின் ஊடாக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு தீர்வை அரசு முன்வைக்க வேண்டுமென்பதே எமது நிலைப்பாடும், எதிர்பார்ப்பும் ஆகும் என்றார். வி-இ

### இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தக் குளிர்த்தித் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 6-30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடம்பெறும். 154

### பாதைப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இது தொடர்பாக அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளதாவது: வடபகுதி மக்களின் பொருளாதாரப் பளுவைக் குறைப்பதற்கும், இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதற்கும் தரைவழிப் பாதைத் திறப்பு அவசியமானது என்ற கருத்தும் மேலோங்கி வருகின்றது. க-இ

### ஆர்ப்பாட்டப்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டானில் கடந்த புதன்கிழமையும், நேற்று முன்தினம் கிளிநொச்சியிலும், நேற்று வவுனியாவிலும், கடந்த சனிக்கிழமை நெடுங்கேணியிலும் இப்பேரணிகள் நடைபெற்றன.

பல்வேறு அமைப்புக்களையும் சேர்ந்த லட்சக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டதுடன், கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களையும் உரியவர்களிடம் சமர்ப்பித்தனர். க-இ

### மின்சார

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

வடபகுதியில் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ள இப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பொறியியலாளர் குழுஒன்று கடந்த சனிக்கிழமை வடபகுதிக்கு சென்றுள்ளது.

புனர் வாழ்வுக்கு மனித வலுவை சேகரிப்பது சிரமமாக உள்ளது என்றும அமைச்சர் மேலும் தெரிவித்தார். க-இ

### ஜூலைக்கு முன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அரசியல் தீர்வுக்கான பேச்சு குறித்து திகதி நிர்ணயிக்கப்படும்.

அரசியல் தீர்வுக்கான அரசாங்கத்தின் யோசனைகள் தயார் நிலையிலேயே உள்ளதாக வெகுஜன தொடர்பு உல்லாச பயணத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார். (கே-சி-இ)

### 4-ம் கட்ட பேச்சு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்துக்கும் இடையில் கடிதங்கள் பரிமாறப்படுவதாக பிரதி பாதுகாப்பமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தம்மிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நீதி மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். க-இ

### மோதல் தவிர்ப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டது. இது பற்றி ரூபவாஹினி மேலும் தெரிவிக்கையில்:

''ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்தை தீவிரவாதிகளிடமிருந்தும், இனவாதிகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

''இத்தகைய பிரிவினர் அரசாங்கத்தைத் தவறான வழிகளில் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்துவருகின்னர். வடபகுதிப் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வு காண்பதைத் தடுப்பதே இவர்களின் நோக்கமாகும்.

''வடபகுதி மீனவர் தமது தொழிலைச் சுதந்திரமாக மேற்கொள்வதற்கும், இராணுவத்தினரின் தலையீடுகள் இன்றி அகதிகள் தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியேறுவதற்கும், மின்சாரம், எரிபொருள் கிடைப்பதற்கும் அரசாங்கம் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

''நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்பு, அரசாங்கத்தின் கவனத்திற்குப் பல கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் விடுத்திருப்பதாகவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாக ரூபவாஹினி தெரிவித்தது. வி-இ

**மணிவாக்கு**

சுவையான உணவு படைக்க அன்புள்ள தாய் இருக்கவேண்டும். ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் இருக்கவேண்டும். நல்ல அறிவு வளர சிறந்த ஆசான் இருக்க வேண்டும். இனிமையான வாழ்க்கைக்கு இங்கிதமான மனைவி இருக்க வேண்டும். தூய சிந்தனை பிறக்க தெய்வபக்தி இருக்கவேண்டும்.

உபநிஷதம்.

## நமது நோக்கு

### மாயை அகலுமா?

பழைய நிலை திரும்பும் என்ற ஒரு மாய நிலையில் நம்மிற் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அரசியல் யதார்த்தத்தை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும் எனத் தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளது.

உலக அரசியற் பொருண்மிய அரங்கிலே காய்கள் வெகு விரைவாக விவேகமாக நகர்த்தப்பட்டு வருவசாற் புதிய கோலங்கள் தென்படுகின்றன.

அவற்றிற்கு ஈடுகொடுத்து நாமும் செயற்படாது விட்டால் மிகவும் பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம் என்பதை மக்கள்உணரவேண்டிய அவசியம்.

இதனை உணராது அரசின் போலிப் பிரசார வார்த்தைகளை நம்பிக் கொண்டு முயற்சி இன்றி இருக்கலாமா?

நாடு சுதந்திரமடைந்த காலப்பகுதியில் அரிசி போன்றவற்றை மானிய விலையிலும் இலவசமாகவும் தந்ததோடு வேறும் டலநலன்புரிச்சேவைகளில் அரசு ஈடுபட்டு வந்தது.

அதேபோல உள்நாட்டு யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து தொழில் இழந்து நிற்கும் அவல நிலையைத் தணிக்கும் முகமாக வெளிநாட்டு உதவிகள் வந்தன

இந்த நிலைகள் என்றும் தொடருமா? திட்டங்கள் பலவற்றை எப்படி அழகாகத் தீட்டினாலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான வளங்கள் நிதி வசதிகள் இலகுவிற் கிடைத்து விடுமா?

தெற்கிலே கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு திண்டாடிக்கொண்டிருக்கிறதுஎன்ற உண்மை நிலையை உணரவேண்டும்.

தெற்கிலே செய்ய முடியாததை அரசு எமது பகுதியிலே சாதித்து விடும் என்று நம்பிக்கொண்டிருக்கலாமா?

எனவேதான் எமது பகுதிப் பொருண்மிய மேம்பாட்டுக்கான வழிவகைகளைக் கண்டறிந்து சிறுகச் சிறுகக் கட்டி எழுப்பவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகிறோம்;

அதுவரும், இதுவரும் என்றெல்லாம் அரசு தனது பிரசாரச் சாதனங்கள் மூலம் விடும் செய்திகளையும் அறிக்கைகளையும் அப்படியே நம்பிக் கொண்டு மாயக்கனவுகளில் மிதந்து கொண்டிருக்கலாமா?

மாயை அகன்று உள்ளதை உள்ளவாறு உணர்ந்து நமது வளர்ச்சிக்கு நாமே பொறுப்பு என்ற விழிப்புணர்ச்சி ஏற்பட தனியார் கல்வி நிறுவனம் போன்றவை செயற்படவேண்டும்!

# ★ இலவச கல்வியை ஒழித்து பல்கலைக்கழகங்களை அரசு தனியார் மயமாக்க முயற்சி

## — பல்கலை மாணவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலவசக்கல்வியை ஒழிப்பதற்கு அரசு பெரும் முயற்சிகளை எடுத்துவருவதாகவும் தேசியக்கல்விக் கொள்கையின் மூலம் பல்கலைக்கழகங்களை தனியார் மயப்படுத்த முயல்வதாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில் நாட்டில் இலவசக்கல்வியை ஒழிப்பதற்கு அரசு முயற்சி செய்து வருவதாக பல்கலைக்கழகங்களுக்கிடையிலான சபை குற்றம்சாட்டியுள்ளது.

கல்விக்கானநிதிஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களில் அமைதியின்மையை அரசே தூண்டி வருகிறது. இதன் காரணமாகவே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் றுகுண பல்கலைக்கழககலைப்பீடமும் மூடப்பட்டுள்ளன எனவும் இச் சபை குற்றம்சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டுகளுக்கு கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரன பதிலளிக்கையில், எவ்வகையிலும் அரசு இலவசக்கல்வியை ஒழிக்கும் நோக்கம் கொண்டிருக்கவில்லை., இலவசக்கல்வியை மேலும் அர்த்தமுள்ளதாக அமுல்நடத்தவே அரசு உறுதி பூண்டுள்ளது.

உண்மையில் கல்விக்கு பெருந்தொகையான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது: கல்வித்துறைக்கு எந்தவகையிலும் நிதி ஒதுக்கீடு குறைக்கப்படவில்லை. கல்வி செலவீனத்தை குறைக்குமாறு உலகவங்கியோ அல்லது சர்வதேசநாணய நிதியமோ எவ்விதக்கோரிக்கையையும் விடுக்கவில்லை எனவும் கூறினார். -சி

# தமிழ்மொழிப்பாடசாலைகளில் 12, 900 ஆசிரிய வெற்றிடம்

## உடன் நிரப்ப மட்டு. எம். பி. கோரிக்கை

(மட்டக்களப்பு)

நாடெங்கிலுமுள்ள 2,212 தமிழ் மொழி மூலப்பாடசாலைகளில் 12,900 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மட்டு மவேட்ட எம். பி. யான திரு. ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில் இந்தப்பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்திசெய்யவேண்டும். இதற்காகவிஷேட ஆசிரிய நியமனத் திட்டம் வேண்டும்.

இந்த வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படாத பட்சத்தில் தமிழ் மொழி மூலமாக கல்விகற்கும்மாணவரின கலவி நிலை பெரிதும்வீழ்ச்சியடைந்து விடும் இந்த ஆசிரியர் பற்றாக்குறை வடக்குகிழக்கிலேயே பெருமளவில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கிழக்கில் 200க்கும் மேற்பட்ட தமிழ்ப்பாடசாலைகளில் படையினர் முகாமிட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத்தொடரமுடியாது கடந்த பல வருடங்களாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# ஜே. ஆர், விஜே, ஹேமாவின் பாதுகாப்பு பிரிவு குறைப்பு

(கொழும்பு)

முன்னாள்ஜனாதிபதிகள் திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன, திரு. டி. பி. விஜயதுங்க, திரு. பிரேமதாஸாவின் மனைவி ஹேமா ஆகியோருக்கு பாதுகாப்பு வழங்கும் படைப்பிரிவினரின் எண்ணிக்கை இருநூறிலிருந்து 70ஆக குறைக்கப்பட்டுள்ளது

முன்னாள் அதிபர்களும் அவர்களது மனைவிமாரும் அரசசெலவில் அனுபவித்து வந்த சுகபோகங்களை பெருமளவில் குறைக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே ஜனாதிபதி சந்திரிகா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி இவர்களது பாதுகாப்பு அணிகள் பெருமளவில் குறைக்கப்பட்டதுடன் இதுவரைகாலமும் இவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த வாகனங்களின் எண்ணிக்கையும் 22 லிருந்து மூன்றாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளன.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த நடவடிக்கைகளை தான் ஒருபோதும்எதிர்க்கப்போவதில்லை என திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

இதேநேரம் அரசு தனது இந்தநடவடிக்கைகளை குறித்து திரு. டி. பி. விஜயதுங்கவுக்கு எதுவித 'அறிவித்தலையும் வழங்கவில்லை எனவும் அவரது குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

அரசின் இந்த திடீர் நடவடிக்கைகள் பற்றி தமக்கு எதுவும் தெரியாதெனவும் ஆட்குறைத்தவர்களிடமே இதற்கான காரணத்தை கேட்டறியுமாறு திரு. சஜித் பிரேமதாஸா கூறியுள்ளார். -சி

## பலதும் பத்தும்

### ஆசனப் பயிற்சி

ஆசனப் பயிற்சி செய்பவர்களுக்கு உணவுக்கட்டுப்பாடும் ஒழுக்கக்கட்டுப்பாடும் மிக அவசியம். அல்லாவிடிற் சிக்கல்கள் பல தோன்றக்கூடும். மது அருந்துதல், புகை பிடித்தல் போன்றவற்றைத் தவிர்த்து இரவில் அதிக நேரம் கண்விழிக்காது, பசியாத போது புசியாது காலையிற் சூரியோதயத்திற்கு முன் ஆசனம் செய்வதே நல்லது.

உடற்பயிற்சியையும் ஆசனங்களையும் ஒரே நேரத்திற் செய்யக்கூடாது. எண்ணை தேய்த்து முழுகிய பின்பும் சாப்பிட்ட பின்பும் கண், காது, தலைவலி போன்ற வியாதிகள் வந்தபோதும் ஆசனம் செய்யக்கூடாது.

குறிப்பாகபெண்கள் மாதவிலக்கு, கருவுற்றபோது பிரசவித்த முதல் மூன்று மாத காலத்தின்போது ஆசனப்பயிற்சியைத் தவிர்க்க வேண்டும். கலாநிதி க. கனகராசா இத்தகவல்களைத் தந்துதவியதற்கு நன்றி!

— மயூரன்

# கால்நடை வளர்ப்பு: 5நாள் கருத்தரங்கு

## இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட கால்நடை வளர்ப்போருக்கான ஐந்து நாள் கருத்தரங்கு யாழ். பிறவுண் வீதி நாவலர் வீதிச் சந்தியிலுள்ள யாழ். அரசினர் கால்நடை வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர் வரும் 25-ந் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறும். இக்கருத்தரங்கில் கோழி, ஆடு, மாடு வளர்ப்பு பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட கால்நடை வளர்ப்போரே இக் கருத்தரங்கில் பங்குற்ற அனுமதிக்கப்படுவர் என யாழ். அரசினர் கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் அறிவித்துள்ளார். -154-சி

தரிசு நிலமெங்கும் காடானல்
தரணியிலே வளம் சேரும்

# இராசிபலன்

21–02–1995
செவ்வாய்கிழமை
(தமிழுக்கு மாசி –09)

ஷஷ்டி: முற்பகல் 10-33 வரை, சுவாதி: முற்பகல் 9.59 வரை, சித்தயோகம், இராகுகாலம்: மாலை 3-31 முதல் 5-01 வரை, சுபநேரம்: காலை 11-01 முதல் 12-31 வரை.

மேடம்: விபரீத ஆசை, மனமகிழ்ச்சி, வெளியார் உதவி.

இடபம்: மாதர் அறிவுரை, காரியசித்தி, பயண ஒழுங்கு.

மிதுனம்: முயற்சி பாதகம், வருவாய் குறைப்பு, அலைச்சல்.

கடகம்: குடும்ப வேற்றுமை, பிடிவாதம், மனக் கவலை.

சிங்கம்: சமாதானம் கூறல், தொழில் சிறப்பு, தியாகம்.

கன்னி: புத்திரர் கவலை, வீண் மனஸ்தாபம், மனப் பயம்.

துலாம்: அதிகாரிகள் பாராட்டு, நண்பர் பெருமை, தெய்வீகத்துறை.

விருச்சிகம்: நெஞ்சுக்கு வேதனை, கடன்சுமை, காரிய நடை.

தனுசு: பெருமை பேசுதல், குடும்ப சுகம், விரோதியை ஜெயித்தல்.

மகரம்: அறிஞர் கலந்துரையாடல், தாயன்பு, கடமையுணர்வு.

கும்பம்: மனவிரக்தி, வேலைக்கஷ்டம், முரண்பாடு.

மீனம்: இயலாமை வெளிப்படல், பதட்டம், வீண் செலவு.

— ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-21
செவ்வாய் இரவு

08-01 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08-10 அறிந்துகொள்ளுங்கள் தகவற் களஞ்சியம்
08-20 நலந்தானா நிகழ்ச்சியில் ''மருந்துக் குளிகைகளின் தவறான பயன்பாட்டால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி வைத்தியக் கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
08-30 செய்திகள்
08-40 கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுஎழுதிய ''சமாதானம்:'
08-50 மலரும் மொட்டுக்கள் என்பன இடம் பெறும்.

1995-02-22
புதன் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம் பெறும்.

தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்
1995–02-21
செவ்வாய் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிக்கீதம்
05-10 புதியவை
05-15 தமிழிசை
05-30 வானொலிமதியூகம்-08
06-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
06-02 இவ்வாரம் இவர்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# 300 கோடி ரூபாவால் பாதுகாப்பு செலவு குறைப்பு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

2900 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்பு செலவினம் 2600 கோடி ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக பிரதி நிதியமைச்சரும், நீதி மற்றும் நடாளுமன்ற விவகார அமைச்சருமான ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்

தற்போதைய அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவு திட்டத்தை முடித்து வைத்து நாடாளுமன்றில் பேசுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அரசாங்கம் சமாதான முயற்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் அக்கறையாக உள்ளது.

உர மானியத்திற்காக 150 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 260 ரூபா படி வழங்குவதற்கு 25 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பிற்காக 270 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கான சுங்கத்தீர்வை தளர்த்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினுர். க-இ

# வரவு செலவு திட்டம்

## 55 வாக்குகளால் நிறைவேறியது

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவு திட்டம் 55 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது,

வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து 133 பேரும், 78 அங்கத்தவர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி ஆதரவாளர்கள் ஐ. தே. கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# பேச்சுவார்த்தையை அடுத்தே

## பாதுகாப்புச் செலவு குறைக்கப்பட்டது

[கொழும்பு]

பாதுகாப்பு செலவுகளை இந்த அரசாங்கம் குறிப்பிட்ட அளவு குறைத்துள்ளது. இனப்பிரச்னை தொடர்பாக தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளை முன்விட்டே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது என குறிப்பிடலாம். இப்போது மோதல் தவிர்ப்பு அமுலில உள்ளது. மிகவிரைவில் அரசியல் பேச்சு வார்த்தைகளையும் நாம் ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும்.

நீதிவிவகார மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சரும் பிரதிநிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ரூபவாஹினிக்கு நேற்று வழங்கிய பேட்டியில் இவ்வாது கூறினுர்.

அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது;-

இனப்பிரச்னைகு பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வைக்காண்பதற்காகவே நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். கடந்த பல வருடங்களாக நடைபெற்றுவந்த போரை முடிவுக்கு கொண்டு வருவதே எமது நோக்கம்.

இந்தப் போர் பல உயிர்களைப் பலி வாங்கியுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய அழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளில் எந்த விதமான தொய்வும் ஏற்படவில்லை. இருபகுதியினருக்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில மிகவிரைவில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

வடபகுதி மக்களின் துன்பங்களைக்குறைப்பது, வடபகுதியைப் புனரமைப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளையில் அரசியல் தீர்வு காண்பதக்கான ஆக்க பூர்வமான பேச்சு வார்த்தைகளையும் நாம் மேற்கொண்டுவருவோம்.

சமாதான முயற்சிகளில் எதுவித தொய்வும் தாமதங்களும் ஏற்பட்டபோதிலும் இவற்றைத் துரிதப்படுத்துவதற்கே அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது என்ருர். -இ

# யாழ். ஆஸ்பத்திரியில் நிர்வாக உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனுவைத்திய சாலையில் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராக திரு, க. நாகலிங்கம் கொழும்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திஞல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த பல வருடங்களாக சேவையாற்றிவரும் இவர் பதவிஉயர்வுடனே இப்பதவிக்கு இம்மாதம் 1ம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பதவி கடந்த ஐந்து வருடங்களாக வெற்றிடமாக இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. சி

## நரோமா பயணிகள் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்[

எதிர்வரும் 26ந் திகதி மாலை திருகோணமலையிலிருந்து புறப்பட்டுவரும் நரோமா சப்பல் மறுநாள் 27 ஆந் திகதி காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். அன்றைய தினம் மாலை திருகோணமலைக்கு அது மீண்டும் புறப்படும். கப்பலில் செல்வதற்குப் பதிவு செய்தவர்கள் நாளை 22ந் திகதி யாழ். செயலகம் பரிபாலனக் கிளையில் பணத்தைச் செலுத்துமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

★ 30 வருட இலக்கிய சேவை

# டொமினிக் ஜீவாவின் பணிக்கு பாராட்டு விழா

(யர்ழ்ப்பாணம்)

'மல்லிகை', டொமினிக் ஜீவாவின் முப்பது வருடச் சஞ்சிகை வெளியீட்டு ஆக்க லெக்கியப் பணியை பாராட்டியும் 'மல்லிகை' 30வது ஆண்டு மலர் வெளியீட்டு வைடவபும் எதிர்வரும் 25-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது,

யாழ் பிரதேச செயலகக் கலை இலக்கிய பரவையைச் சேர்ந்த க. கணேசவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு வைபவத்தில செங்கை ஆழியான் பாராட்டுரை வழங்குவார். கலாநிதி நா. சுப்பிரமணியன்சிறப்புரையையும் வெளியீட்டுரையை திருமதி கோகிலா மகேந்திரனும் வழங்குவர் முதற் பிரதியை யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சூ. சிறில் பெறுவதோடு பதிலுரையை மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவாநிகழ்த்துவார்

இவ்வெளியீட்டு வைபவம் யாழ். பிரதேசச் செயலகக் கலை இலத்கியப்பேரவையிஞல் நடாத்தப்படுகிறது. ம-சி

## சமாதான முயற்சிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் பதில்கிடைத்துள்ளது.

''தற்போது நடைமுறையில் இருக்கும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம், சமாதான முயற்சிகளுக்கு நல்ல ஆரம்பமாகும். இது நிரந்தரமான போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள், இந்த நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் உறுதியாகவே இருக்கின்றனர்' சமாதானத்திற்கும், இனப் பிரச்னைத் தீர்வுக்கும் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பின் மூலம் வழி பிறந்துவிட்டது.

''இதஞல் சமாதானத் தீர்வுக்கு உறுதியான அடித்தளம் போடப்பட்டுவிட்டது. ஆகவே சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

சாதான முயற்சிகளுக்கான செயற்பாடுகள் அடுத்தடுத்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலேயே பெரிதும் தங்கி உள்ளது. இதையொட்டி நாம், நிறைய செய்யவேண்டி இருக்கிறது. இவை உடனடியாக செய்து முடிக்கக்கூடியவை அல்ல.

விடுதலைப் புலிகள் பல விடயங்களை எமக்குச்சுட்டிக் காட்டியுள்ளார்கள் சமாதானத்தின் பூரணவெற்றிக்கு படிப்படியான செயற்பாடுகள் அவசியம், தடைநீக்கப்பட்ட பொருட்கள் எவையும் சரியான முறையில் யாழ்ப்பாணம் சென்றடையவில்லை பொருளாதாரத்தடைத் தளர்வுக்கான உரிய பலனை வ-பகுதி மக்கள் அனுபவிக்கவில்லை. இந்த பொருளாதாரத்தடைத்தளர்வு அர்த்தமுள்ளதாக்கப்படவண்டும் என்றும் கூறஞர்.

யாழ்ப்பாணம் வந்திருந்த திரு. வாசுதேவநாணயக்காரவின் தலைமையிலான சமாதானத் தூதுக்குழுவினரை விடுதலைப்புலிகள் கடந்த ஞாயிறு இரவு 8-40 மணியளவில் நொச்சிமோட்டை இராணுவ தடைமுகாமில் இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

பிரிகேடியர் லயனல் பலகெல்ல, கேணல் சாலிய குலத்துங்க, மேஜர் சேனநாயக்க, பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. மோகனதாஸ் ஆகியோர்மேற்படி குழுவினரை வரவேற்றனர், புலிகளின் தரப்பல் குட்டி, சுதா ஆகியோர் திரு. வாசுதேவநாணயக்கார குழுவினரை தமது வாகனங்களில கூட்டிச் சென்று நொச்சி மோட்டை இராணுவத்தடைமுகாமுக்குள் கொண்டுசென்று இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது.

இக்குழுவினரின் வருகைக்காக, ஞாயிறு பிற்பகல் 3-30 மணிவரை காத்திருந்த சமாதானத்துக்கான ஜனநாயகக் குழுவினர், வாசுதேவா குழுவினரை மாலைசூட்டி வரவேற்றனர். பின்னர் காமினி மகா வித்தியாலயத்தில் இக்குழுவினருக்கு பொது வரவேறபு வைபவமும் நடைபெற்றது. (வி-இ)

## பொலிஸார் மீது வழக்கு தக்கல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடமைபுரிய மறுத்த ஒரு தொகுதி பொலிசார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

பதுளை நீதிமன்றத்தில் அண்மையில் இவ்வழககுகள் தாக்கல் செய்யப்பட்டன. (க-இ)

# பேச்சைத் துரிதப்படுத்துமாறு 'வாசு' அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனுன பேச்சுவார்த்தைகளைத் துரிதப்படுத்துமாறு திரு. வாசுதேவா நாணயக்கார தலைமையிலான சமாதான தூதுக்குழு அரசாங்கத்தைக்கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பியதுமே இந்த சமாதானத் தூதுக் குழு அரசாங்கத்தை இவ்வாறு கோரியதாக பி.பி.சி. தெரிவித்தது.

வடபகுதிக்கு உணவு வகைகளையும் மருந்து வகைகளையும் அதிகளவில் அனுப்பி வைக்குமாறும் இந்தக் குழு அரசாங்கத்தை மேலும் கோரியுள்ளது.

வடக்கில் மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றப்படவேண்டும். அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு சரியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக அரசு இதனை மேற்கொள்ள வேண்டுமெனவும் சமாதான தூதுக்குழு மேலும் அரசைக் கோரியுள்ளதாகவும் பி. பி. சி. தெரிவித்தது. இ

## யாழ். மாணவர்களின்

(1-ம் பக்கத தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற யாழ். ஆசிரியர் சம்மேளனக்குழு ஒன்று கல்வி அமைச்சரை சந்தித்து பேச்சுநடாத்தியது.

யாழ். மாவட்ட க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களின் 1994ம்/95ம் கல்வியாண்டிற்கான வெட்டுப்புள்ளிகள் வழக்கம் போல ஏனைய மாவட்டங்களை விட கூடுதலாக இம்முறையும் உள்ளதாகவும் இது தொடர்பாக மேற்படி மாணவர்கள் அடையும் விரக்திநிலை குறித்து அமைச்சருக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போதே அமைச்சர் இந்த விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிவித்தார். க.இ

# வருமானம் குறைந்தோரும் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்

(உடுவில்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பம் செய்யும்போது பெற்ருேரின் வருமானம் குறிக்கப்பட்ட வருமானத்திற்கு கூடியது என பதியப்பட்டாலும் தற்போது வருமானம் குறைவடைந்திருப்பின் புலமைப் பரிசிற்கான சலுகைகளை பெற்றுக்கொள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பற்றிய விபரங்கள் தற்போது கோட்ட ரீதியாக திரட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு விபரங்கள சேகரிக்கப்படும் வேளையில், முன்னர் வருமானம் கூடியிருந்தும், தற்போது அப்பெற்ருேர்களின் வருமானம் குறைவடைந்திருப்பதால் அவர்கள் தமது பகுதி கிராமசேவையாளர்கள், பிரதேச செயலர்களின் சிபார்சுடன் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. -109-சி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-